**கல்கமுவ பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 02 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 19 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கல்கமுவ பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 9,671,595 ஆன 13 நிலையான சொத்து உருப்படிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டுப் பெறுமதி மற்றும் புதிய நிர்மாணங்களின் பெறுமதி நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டின் சரிசெய்வதாக அறிய தருகின்றேன். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 09 மயானங்கள் 11 விளையாட்டரங்குகள் மற்றும் 04 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான காணி கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணியின் மதிப்பிடப்பட்ட பெறுமதியைப் பெற விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளதுடன், தகவல்களைப் பெற்றதன் பிறகு அவற்றை நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | உழவு இயந்திரம் மற்றும் டேலர் பெறுமதி ரூபா 1,026,500 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 1,512,200 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களின் சரியான பெறுமதி கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இருப்பு பதிவேட்டின் பிரகாரம் சரியான இருப்பு பெறுமதி ரூபா 2,647,630 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 2,771,161 ஆக காட்டப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு விசாரணையில் சுட்டிக் காட்டப்பட்ட இருப்பு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,647,630 என குறிப்பிடப்பட்ட போதிலும் அது சரியான இருப்பு மீதியொன்று அல்லாமல் இருந்ததுடன் சரியான ரூபா 2,771,161 என மீள் பரிசோதனையின் போது உறுதிப் படுத்தப்பட்டது |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 4,503,117 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 1,747,867 எனவும் காட்டப்பட்டிருந்தது. | பெறவேண்டிய தொகையை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் கணக்கீடு செய்யப்பட்ட போதும் இது அச்சிடும் போது இடம்பெற்ற தலைப்பு மாறியுள்ளதாக ஏற்றுக்கொள்கின்றேன் |
| ஊ) | நிர்மாண வேலைகள் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் நிர்மாணக் கடன்கெடுத்தோர் மீதி ரூபா 55,886,935 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 56,065,862 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு விசாரணையில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் 2019 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (எ) | தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 22,097,716 ஆன 02 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் | நிதி அறிக்கை மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒப்பிடப்பட்டு சுட்டிக் காட்டப்பட்ட |

| | | |
|---|---|---|
| சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன. | சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இப்பெறுமதியை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் | | | |
| (i) விதி 65 | நிர்மாண வரிக் கொடுப்பனவை தவிர்க்கும் நபர்கள் தொடர்பான பட்டியலொன்றும் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | கொடுப்பனவை தவிர்க்கும் நபர்கள் தொடர்பான பட்டியலொன்றும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அவ்வாறான பதிவேடு தயாரிக்கப்பட்டு செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ii) விதி 218 | சபையின் அனைத்து காணி மற்றும் கட்டிடங்களும் ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு தடவை பரிசோதிக்கப்பட்டிருக்க வில்லை. | விதிகள், பிரகாரம் சபையின் அனைத்து சொத்துக்கள் பரிசோதனை நடவடிக்கை எடுக்க வேண்டும். | எங்களிடம் ஒரே ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தர் இருப்பதால், ஒவ்வொரு ஆண்டும் எங்களால் எல்லா காணிகளையும் பரீட்சிக்க முடியவில்லை, எதிர்காலத்தில் ஊழியர்களின் பற்றாக்குறை நீங்கியதும் மற்றைய எல்லா காணிகளையும் பரிசோதனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஐயவினாவில் உள்ளவிடயங்கள் உண்மையாணது என ஏற்றுக்கொள்கின்றேன் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,025,962 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,467,280 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரியும் வரியும் | 4,328 | 4,523 | 4,642 | 932 | 3,380 | 4,290 | 3,349 | 1,050 |
| ii. | வாடகை | 22,043 | 21,106 | 21,101 | 14,773 | 22,121 | 19,038 | 16,646 | 14,041 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,057 | 3,198 | 3,198 | 06 | 3,340 | 2,367 | 2,361 | 06 |
| iv. | ஏனைய வருமானம் | 110,804 | 70,844 | 76,215 | 15,638 | 90,667 | 64,063 | 66,769 | 22,101 |
| | மொத்தம் | 139,232 | 99,671 | 105,156 | 31,349 | 119,508 | 89,758 | 89,125 | 37,198 |

குறிப்பு

2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட வருமன பெறுமதியில் கடந்த ஆண்டுகளில் உரிய நிலுவை பெறுவனகுளும் உள்ளடக்கும்

### 2.2.2 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 433,315 ஆன நிலுவை கடை வாடகையில் ஓராண்டிற்கு மேற்பட்ட மீதி ரூபா 68,835 ஆக இருந்தது. | குறிக்கப்பட்ட காலப்பகுதியில் வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வில் காட்டப்பட்டுள்ள தொகை ரூபா 433,315 ஆகும் |
| (ஆ) | 2014 மார்ச் முடிவடையும் போது செலுத்த வேண்டிய பொது வர்த்தக தொகுதி 03 கடைகளுக்குரிய முற்கொடுப்பனவு ரூபா 1,254,178 அறவிடப்பட வேண்டியதுடன் 2017 ஆம் ஆண்டு முற்பண முறைமையின் கீழ் வழங்கப்பட்டுள்ள, 2018 திசெம்பர் 12 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 3,705,306 தொகையில் ரூபா 2,190,240 மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. | குறிக்கப்பட்ட காலப்பகுதியில் வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இக்கடைகள் தொடர்பாக கடை உரிமையாளர்கள் தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் முற்கொடுப்பனவை செலுத்துமாறு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள துடன் அவ்வாறு கொடுப்னவு செய்யாவிட்டால் கடைகளை சபைக்கு பொறுப்பேற்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (இ) | வருடாந்த கேள்வி அடிப்படையில் ஆதனங்கள் குத்தகைக்கு வழங்குவதிலிருந்து மீளாய்வாண்டிற்கு முன்னிருந்து வரும் 10 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 864,236 ஆன நிலுவை வாடகை தொகை மற்றும் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 1,144,013 ஆன நிலுவை குத்தகை வாடகை தொகையும் அறவிட வேண்டியதாக காணப்பட்டன. | உடன்படிக்கை யின் பிரகாரம் குத்தகை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விசாரணையின் உள்ள விடயம் உண்மையானதாகும் |

### 2.2.3 அனுமதிப்பத்திரங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கைத்தொழில் தயார்படுத்தல் மற்றம் சுற்றாடல் காரணத்தின் பேரில் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிபப்த்திரங்கள் வழஙகப்படாத 14 நெல் ஆலைகள், மரம் கிழிக்கும் ஆலைகள் என்பவற்றிற்காக வியாபார அனுமதிப்பத்திரங்கள் வழங்கப் பட்டிருந்தன. | பொது சுகாதார பரிசோதகரின் பரிந்துரை இல்லாத கைத்தொழில் மேற்பார்வை செய்யப்பட்டு எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பொது சுகாதார பரிசோதகருக்கு தொடர்புபடுத்தப்பட்டதன் பின்னர் பொருத்தமென பரிந்துரைக்கப்பட்டால் மாத்திரம் அனுமதிப்பத்திரம் வழங்கல் மேற்கொள்ளப்படுகின்றது. பொருத்தமற்றதென குறிப்பிடப்பட்ட அனுமதிப்பத்திரங்களை இரத்துசவ் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 2.2.4 ஏனைய வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதியில் மோட்டார் கேடர் இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியதால் அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா 3,235,919 ஆக இருந்ததுடன் இதில் 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக இருக்கும் மீதி ரூபா 3,016,308 ஆக இருந்தது. | சபை நிர்மாணங்களுக்காக அறவிடப்ப வேண்டிய பணம் கணக்குகளுக்கு இடையே மாற்று வதற்கும் ஏனைய நிறுவனங்களினதும் நபர்களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடு வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் தீர்வு செய்வதாக அறிய தருகிறேன். |
| (ஆ) பதப்படுத்தல் இயந்திரம் வாடகைக்கு வழங்கியதால் மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய ரூபா 1,314,972 ஆன நிலுவை வாடகையிலிருந்து ஓராண்டிற்கு மேற்பட்ட மீதி ரூபா 1,309,472 ஆக இருந்தது. | இதுவரை அறவிடப்படமையால் நிறுவனங்கபளிதும் நபர்களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய பணத்தை அறிவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவிடப்பட வேண்டிய பணம் தொடர்பாக ஒவ்வொரு நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| | | |
|---|---|---|
| (இ) JCB இயந்திரத்தை 2018 திசெம்பர் 31 உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 2,665,358 தொகையான நிலுவை வாடகையில் ஓராண்டிற்கு மேற்பட்ட மீதி ரூபா 1,302,656 ஆக இருந்தது. | இதுவரை அறவிடப் படாமையால் நிறுவனங்களிடமிருந்தும் நபர்களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடு வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் தீர்வுசெய்வதாக அறிய தருகிறேன். |

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) நிர்மாணங்கள் மேற்கொள்ளபடாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய பாதிடப்பட்ட ரூபா 18,439,476 ஆன 40 நிர்மாண வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பாதிடப்பட்ட நிர்மாண வேலைகளை நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிர்மாண வேலை விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |

#### (ஆ) திண்மக்கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்மக்கழிவுப்பொருள் நிலையத்திற்கு யானைகள் வருவதை தடுப்பதற்கு பயன்படுத்தியுள்ள யானை வேலி செயலற்று இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்த போதும் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | யானை வேலிகளை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையொன்றை சபைக்கு பெற்றுக்கொளன்ள முடியாததால் கல்கமுவ வனசீவராசிகள் அலுவலகத்துடளன் தொடர்பு கொண்டு தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையொன்றை பெற்று இந்த யானை வேலியை |

| | | |
|---|---|---|
| | | தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஓராண்டிற்கு மேற்பட்ட மற்றும் அதனை மிகைத்து ரூபா 20,628,855 கூட்டுத் தொகையான செலுத்த வேண்டிய மீதிகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இத்தொகை துரிதமாக தீர்வு செய்வதற்கு விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 7,973,605 தொகையான வைப்புத் தொகையில் மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்களை இனங்கண்டு மீள கொடுப்பனவு செய்வதற்கு அல்லது வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வைப்புக்களை மீளச் செலுத்துவதற்கு அல்லது வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை வேண்டும். | வைப்புத்தொகையை இயலுமானவரை வருமானத்திற்கு எடுப்பதற்கு அல்லது அல்லது உரிய வைப்பாளர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 19 வெற்றிடங்களும் 34 மிகைகளும் காணப்பட்டன. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து ஆட்சேர்க்கப் படாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 19 வெற்றிடங்கள் காணப்பட்டதுன் இதுவரை 03 பதவிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதுடன் சுகாதார தொழிலாளர் (ஒப்பந்தம்) 06 பதவிகளுக்காக ஆட்சேர்க்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களுக்காக மதிப்பீட்டு அறிக்கை பெற்றுகொள்ளப்படும் வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய நிர்மாணங் களுக்காக மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்படும் வீத வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தகைமையுடைய மற்றும் முறையான பயிற்சி உத்தியோகத்தர்கள் இல்லாமையால் அவ்வாறு செய்வதற்கு முடியாதிருந்த துடன் எதிர்காலத்தில் உள்ளூராட்சிமன்ற ஆணையாளருடன் கலந்துரையாடி அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 கையேற்கப்படாத சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பயன்படுத்தப்படும் 07 வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை கையேற்க நடவடிக்கை எடுத்து கணக்கீடு செய்யப்பட வேண்டும் | விரைவாக கையேற்பதற்காக நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் |
| (ஆ) | சபையினால் பராமரிக்கப்படும் 93 மயானங்களை வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்பினை துரிதப்படுத்த வேண்டும் | ஒவ்வொரு மயானத்திற்காகவும் குறித்த நிறுவனங்களின் பரிந்தரைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அந்நிறுவனங்களில் காணப்படும் தாமதங்களால் கையேற்றல் தாமதமடைந்துள்ளது. |
| (இ) | 2004 அஆம் ஆண்டின் போது பிரதேச சபைக்கு கையளிப்பதற்காக அளவிடப்பட்டு வேறாக்கப்பட்ட நாத்தேரிய, நவகத்தேகம பிரதான வீதி எல்லையாக உள்ள 0.152 ஹெக்டேயர் காணி 2018 நவம்பர் 13 ஆந் தகதி வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை. | கையேற்பினை துரிதப்படுத்த வேண்டும் | கையேற்பினை மேற்கொள்ளு மாறு தொடர்ந்தும் கோரப்பட்ட போதும் இதுவரை கையளிப்பு நடவடிக்கைகள் கல்கமுவ பிரதேச செயலாளரினால் எமக்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கவில்லைஎன அறிய தருகிறேன். |

### 3.5.2 விளைவற்ற குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமாக காணப்படும் ரூபா 362,500 பெறுமதியான 03 வாகனங்கள் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் விளைவற்றுக காணப்பட்டன. | விளைவற்ற சொத்துக்களை திருத்தம் செய்ய அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவ்வாகனம் பயன்படுத்த முடியாத நிலைமையில் உள்ளதால் எதிர்காலத்தில் இயந்திரப் பொறியியலாளரின் ஆலோசணையின் பேரில் ஏலவிற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமாக காணப்படும் ரூபா 3,832,795 ஆன 15 சொத்துக்கள் விளைவற்று காணப்பட்டன. | விளைவற்ற சொத்துக்களை செயற்திறனான செயற்பாட்டிற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது காணப்படும் உணவகத்தின் கூரை திருத்தம் செய்யப்பட்டு கேள்வி கோரி சபைக்கு பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியதருகின்றேன் 10 மெரிகோ சுற்றுக்கள் திருத்தம் செய்யப்பட்டு வருவதுடன் 04 அன்ன படகுகள் அதே நிலைமையில் காணப்படுவதாக குறிப்பிடுகின்றேன். |

## 3.6 பெறுகை

### 3.6.1 வழங்கலும் சேவைகளும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வீதி விளக்குகள் கொள்வனவு செய்வதற்காக குறைந்த விலை நிராகரிக்கப்படுவதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் தொழில் நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் குறைந்த விலைகள் மதிப்பீடு செய்யாமை காரணமாக சபை ரூபா 162,600 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. | சபை நிதியத்திற்கு சாதாகமான வகையில் தரமான உயர்தரத்திலான பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | விலை விபரங்கள் சமர்ப்பிக்காத பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நேரும் போது அப்பொருட்களை கொள்வனவு செய்வதற்காக மேலும் பல நிறுவனங்களுக்கு செல்ல நேர்வதால் சிக்கலாக இருப்பதால் அந்நிறுவனங்களிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு விலைகள் ஒப்பீடு செய்யப்படுவதில்லை எனவும் அறியதருகின்றேன். |